மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 47/2012 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சுப்ரமணியன் | நாள் | 17.08.2022 |
| தகப்பனார் பெயர் | மகாலிங்கம் | | |

**வா.சா.1–ஆல் 22.09.2021ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலம் தொடர்பாக 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1) நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக எழுதப் படிக்க தெரியும். இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி வெங்கடாச்சலம் என்பவர் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். நாங்கள் 1 முதல் 5 வரையிலான வாதிகளும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து 5.11.2008ல் பாக பிரிவினை பத்திரம் (Ex.A1) ஏற்படுத்திக்கொண்டோம் என்றால், சரிதான்.

2) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் 16வது பக்கத்தில் "D" செட்யூலில் கண்டுள்ள சொத்தில் மேச்சேரி கிராம சர்வே எண்.325/1Aல் மொத்த விஸ்தீரனம் 1 ஏக்கர் 68 செண்டுகளில் 0.43 செண்டுகள் 2ம் பிரதிவாதியான வெங்கடாச்சலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3) பாகபிரிவினை பத்திரத்தில் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 43 செண்டுகளுக்கான செக்குபந்தி விவரம் அய்யந்துரை பாக நிலத்திற்கும்–கிழக்கு, ரோட்டிற்கும் – தெற்கு, சுப்ரமணியன் பாக நிலத்திற்கும் – மேற்கு, பழனி நிலத்திற்கும் – வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

4) மேற்படி 2ம் பிரதிவாதிக்கு பாகபிரிவினை பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்ட 43 செண்டுகள் நிலத்தை, அதே அளகளுடன் அதே செக்குபந்தி விவரங்களுடன் அதே சர்வே நெம்பரில், 2ம் பிரதிவாதி 11.6.2009ம் தேதியில் (Ex.A6) கிரய ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான்.

5) மேற்படி சர்வே எண்.325/1A ல் 43 செண்டுகள் நிலத்தை தவிர 2ம் பிரதிவாதியிடமிருந்து வேறு எந்த நிலத்தையும் 1ம் பிரதிவாதி வாங்கவில்லை என்று சொன்னால், சரிதான். அதேபோல் சர்வே எண்.325/1A ல் 43 செண்டுகள் நிலத்தின் நான்குபுற செக்குபந்தி விவரங்களில் எந்த திசையிலும் பொதுகிணறு, பொது வாய்க்கால், பொது பைப்லைன் ஆகியவை செல்வதாக (Ex.A1) பாகபிரிவினை பத்திரத்தில் கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால், சரிதான். ஆனால், மேற்படி 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட 43 செண்டுகளுக்கான செக்குபந்தி விவரங்கள் குறிப்பிட்டுள்ள பக்கத்திற்கு அடுத்த பக்கத்தில் மேற்படி விவரங்கள் அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளன.

6) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்திற்கு முரணாக தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. என் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் "B" செட்யூல் வண்டித்தடமானது பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும் சர்வே எண்.325/1B ல் பொதுகிணறு பாகத்தின் கிழக்குபுறமாகவும், மேற்குபுறமாகவும் BCDE. செட்யூல்தாரர்களுக்கு விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பாத்தியமும், மாமூல் தடவழி பாத்தியமும் எப்போதும் போல் உள்ளது என்றும், இதை தடை செய்ய நம்மில் எவருக்கும் உரிமைய இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என நான் சொல்லியுள்ளது தவறானது என்று சொன்னால், சரியல்ல. அவ்வாறு எதுவும் பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல.

7) வா.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் சர்வே எண்.325/1A-ம், 2ம் பிரதிவாதி வெங்கடாச்சலத்தின் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் சர்வே எண்.325/1A ல் உள்ள 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட 43 செண்டுகளுக்கு தொடர்புடையதல்ல என்று சொன்னால், சரியல்ல.

8) நான் சொல்வதுபோல் உண்மையில் அவ்வாறு பொது கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்கான வாய்க்காலோ, 12 அடி தடமோ அல்லது பைப் லைனோ இருந்திருந்தால், அவற்றை பற்றி பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டிருப்போம் என்றாலும், அவ்வாறு எதுவும் இல்லை என்பதால்தான் பாகபிரிவினை பத்திரத்தில் 2ம் பிரதிவாதியின் பாத்திய சொத்துக்கு கண்டுள்ள செக்குபந்தி விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல.

9) 1ம் பிரதிவாதி மேற்படி 43 செண்டுகள் நிலத்தை அதன் செக்குபந்தி விவரங்கள் மற்றும் அளவுகளை வா.சா.ஆ.1ல் கண்டுகள்ளபடி சரிபார்த்து அதன்பின்தான் 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளார் என்பதால், வா.சா.ஆ.6 கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.

10) 1ம் பிரதிவாதி மேற்படி கிரய மூலம் அவருக்கு பாத்தியப்பட்ட 43 செண்டுகளில் 42 செண்டுகளை 7ம் பிரதிவாதி முத்து என்பவருக்கு கிரயம் அளித்துவிட்டு 1 செண்ட் மட்டும் 1ம் பிரதிவாதி வசம் வைத்துள்ளார் என்று சொன்னால், சரிதான்.

11) மேற்படி 1ம் பிரதிவாதி கிரயம் கொடுத்த 42 செண்டுகள் நிலத்திற்கு தெற்குபுறமும், பழனி நிலத்திற்கு வடக்கிலும் உள்ள மேற்படி 1 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதிதான் இன்று வரை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல.

12) எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.325/1Bல் உள்ள 42 செண்ட் நிலத்திற்கு நான் கம்பி வேலி அமைத்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி 42 செண்ட் நிலத்திற்கும் தெற்குபுறம் 12 அடி தடமும், அதற்கு தெற்குபுறம் அய்யந்துரை நிலம் உள்ளது.

13) வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில் அவ்வாறு சர்வே எண்.325/1A, சர்வே எண்.325/1B ஆகிய நிலங்களுக்கு தெற்கில் அவ்வாறு வழித்தடம்

உள்ளதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும், நான் பத்திரத்திற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல.

14) மேற்படி வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரித்தில் "இ" செட்யூலில் எனக்கு ஒதுக்கப்பட்ட 42 செண்ட் நிலத்திற்கு செக்குபந்தி விவரங்களானது சித்தன் நிலத்திற்கு–மேற்கு, சிக்கண்ணன் மகன் அய்யந்துரை நிலத்திற்கு– வடக்கு, ரோட்டிற்கு– தெற்கு, வெங்கடாச்சலம் பாக நிலத்திற்கு – கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

15) வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான் வா.சா.ஆ.6 கிரய ஆவணமும், வா.சா.ஆ.8 கிரய ஆவணமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவை அனைத்தும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. மேற்படி பத்திரங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து வருவாய் ஆவணங்களும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

(5 மற்றும் 6 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.